செய்தி வெளியீடு எண்: 443 நாள்: 21.07.2019

**இன்று (21.07.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆற்றிய உரை:**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குதல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 34 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 நியாய விலைக் கடைகள், ரூபாய் 22 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒரு சமுதாயக் கூடம், ரூபாய் 19 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கச்சுப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்கான சுற்றுச் சுவர் கட்டடம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் சார்பாக ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்கநாடு ஆரம்ப சுகாதார நிலையம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடப்பாடி நகராட்சியில் பேருந்து நிலையத்தில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீன சுகாதார வளாகக் கட்டடம், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகளின் சார்பில் எடப்பாடி அரசு மருத்துவமனையில் சுமார் 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 91 இலட்சம் 15 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 11 முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்களின் ஆசியோடும், அம்மா அவர்களின் அருளாசியோடும்

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், காவல் துறையின் சார்பில் ரூபாய் 91 இலட்சத்து 61 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊரகக் காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

எடப்பாடியில், அரசு பொது மருத்துவமனைக்குத் தேவையான நவீனக் கருவிகளை வழங்கி, மருத்துவமனையை மேலும் சிறப்பாக செயல்படுத்திட வேண்டுமென்று எடப்பாடி மக்கள் ஏற்கனவே என்னிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, நவீனக் கருவிகள் வாங்குவதற்கு ரூபாய் 4 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், இரத்த சேமிப்பு வங்கி, இரத்த சுத்திகரிப்பு, எலும்பு முறிவுக்கு ஆபரேஷன் தியேட்டர் மற்றும் ஜெனரேட்டர், 50 படுக்கைகள் கொண்ட கூடுதல் கட்டடம் என பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் இம்மருத்துவமனையிலேயே அறுவை சிகிச்சை செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு அம்மாவினுடைய அரசால் தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக எடப்பாடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 32 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் மின்கலத்தால் இயங்கும் 18 குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த வாகனங்கள் மூலமாக குப்பைகளை சேகரித்து எளிதாகத் தரம் பிரிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும்.

தற்பொழுது இயக்கப்பட்டு வரும் எடப்பாடி–கொங்கணாபுரம் வழியாக தாதாபுரம், கோரணம்பட்டி, மூலப்பாதை செல்லும் நகரப் பேருந்தின் வழித்தடத்தை மெய்யம்பாளையம் வழியாகச் செல்ல நீட்டிப்பு செய்யப்படுகிறது.

இதயதெய்வம் அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதமான திட்டம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம். இன்றையதினம் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கியிருக்கின்றோம். இவைகள் ஆயிரக்கணக்கான கோடி மதிப்பீட்டில் உங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதனை நல்ல முறையில் பயன்படுத்தி, மாணவ, மாணவிகள் தங்கள் அறிவுத் திறனையும், பொது அறிவுத் திறனையும் பெருக்கிக்கொண்டு, எதிர்காலத்தில் எத்தனை போட்டித் தேர்வுகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இதன்மூலம், இன்று எடப்பாடியில் 20 பள்ளிகளைச் சார்ந்த 6172 மாணவ, மாணவிகளும், கெங்கவள்ளி சட்டமன்றத் தொகுதியில் 18 பள்ளிகளைச் சார்ந்த 3661 மாணவ, மாணவிகளும், ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் 20 பள்ளிகளைச் சார்ந்த 4823 மாணவ, மாணவிகளும், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 15 பள்ளிகளைச் சார்ந்த 3923 மாணவ, மாணவிகளும், சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதியில் 9 பள்ளிகளைச் சார்ந்த 2914 மாணவ, மாணவிகளும் என 78 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 9115 மாணவர்கள், 12378 மாணவிகள் என மொத்தம் 21493 மாணவ, மாணவிகள் ரூபாய் 26 கோடியே 37 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மடிக்கணினி வழங்கும்விதமாக, இன்றையதினம் 56 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்க பல்வேறு வசதிகள் கொடுக்கப்பட்டு கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து தமிழ்நாடு கல்வியில் சிறந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, ஐடிஐ கல்லூரி என ஏராளமான கல்லூரிகளைத் திறந்து கிராமத்திலிருந்து நகரம் வரையுள்ள ஏழை மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வி பயில உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். எடப்பாடி மக்கள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ஆம் ஆண்டே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள்.

சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவ, மாணவிகளுக்கு Smart Card வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து 2 மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

வருவாய்த் துறையின் மூலமாக 54 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையும், 46 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையும், 30 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகையும், 8 நபர்களுக்கு திருமண நிதி உதவியும், 6 நபர்களுக்கு விதவை உதவித் தொகையும், 2 நபர்களுக்கு விவசாய கூலி உதவித் தொகையும், 2 நபர்களுக்கு கணவனால் கைவிடப் பட்டோர் உதவித் தொகையும், 2 நபர்களுக்கு முதிர்கண்ணி உதவித் தொகையும், 39 நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்களும், 130 நபர்களுக்கு நகர நில வரிப்பட்டாக்களும் என மொத்தம் 319 நபர்களுக்கு ரூபாய் 6 கோடியே 40 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 88 இலட்சம் வீடு கட்டுவதற்கு மானிய நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

கூட்டுறவுத்துறையின் சார்பில் 108 நபர்களுக்கு பயிர் கடனும், 73 நபர்களுக்கு சுய உதவி குழு கடனும், 1 நபருக்கு மத்திய கால கடனும், என மொத்தம் 182 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 4 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான கடன் உதவிகளும்,

மகளிர் திட்டம் சார்பில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டதின் கீழ் 100 மகளிருக்கு மானியமும், 6 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் உதவியும் என 106 மகளீர்களுக்கு ரூபாய் 58 இலட்சம் மானியம் மற்றும் வங்கி கடன் உதவிகளும்,

தோட்டக்கலைத் துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூபாய் 14 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பிலான வேளாண் கருவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் 60 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சத்து 74 ஆயிரம் மதிப்பிலான செட்டு நீர் பாசன கருவிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 8 ஆயிரம் மானியமும்,

பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூபாய் 1 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான பட்டுப்புழு வளர்ப்பு தலவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 25 ஆயிரம் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு 8 கிராம் தங்கமும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 52 ஆயிரத்து 682 மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரும்,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூபாய் 9 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரமும் என மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் 22,294 பயனாளிகளுக்கு ரூபாய் 36 கோடியே 59 இலட்சத்து 88 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து, இவ்விழாவிற்கு வருகைபுரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**